ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2307/22 2022 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා 2022.11.24
2307/22 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1991, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிய 689/14 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 166 ஆம் இலக்க கட்டளைக்கு உட்பட்டுள்ள காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 03J/91/LRB/113-11-தொகுதி.
பிரதேச செயளாளர் இல. : GCF/ATH/KL/02/LR.
காணி அமைச்சு, "மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, நவெம்பர் 16.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொலொன்னாவ உப பிரதேச பிரிவில், அதிகாரி பற்று அம்பதலென் பஹல அலுத்குரு கோறளே சிறு பிரிவில், கொதட்டுவ புதிய நகர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2004.02.16 ஆம் திகதிய, கொ 7415 ஆம் இலக்க திருத்தப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லை:

**1. துண்டு இல. 154 - பிட்டவகுரெகும்புர - விஸ்தீரணம் : 0.025 ஹெக்டயார்**

வடக்கு : இந்த வரைபடத்தில் துண்டுகள் 152, 153 மற்றும் 14; கிழக்கு : இந்த வரைபடத்தில் துண்டுகள் 14 மற்றும் 147; தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டுகள் 147 மற்றும் வரி மதிப்பீட்டு இல. 32, நின்தஹேன வீதி; மேற்கு: வரி மதிப்பீட்டு இல. 32, நின்தஹேன வீதி, இந்த வரைபடத்தில் துண்டுகள் 152 மற்றும் 153.

EOG 11 - 0253